பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 [illegible]: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 15 (28—3—68) வியாழன் ★ வெளியூர்: பங்குனி 16 (29—3—68) வெள்ளி [இதழ்: 239

மாணவச் சமுதாய நலனில் அக்கறை கொண்டது இந்த அரசு

...வர்களின் பாதுகாப்புக்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும்

...டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா ஆறுதல் மொழி

சென்னை, மார்ச் 28—

...ணவர்களுக்கு எல்லாவிதமான பாதுகாப்பும் ஆறுதலும் அளிக்க இந்த அரசு ...வடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதைத் தோழமை உணர்ச்சியோடும், பணி...வோடும் மாணவச் சமுதாயத்துக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்; அவர்கள் நலனில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு; அவர்களுக்கு அளிக்கவேண்டிய பாதுகாப்பை அளிக்க ஒருபோதும் தயக்கம் காட்டமாட்டோம்!

"இயல்பான நிலைமை ஏற்பட்டதும், மாணவர் பிரதிநிதிகள்—தொழிலாளர் பிரதிநிதிகள்—அரசின் பிரதிநிதிகள்—மற்றும் எல்லாக் கட்சித் தலைவர்களும் உட்கார்ந்து பகைமை உணர்ச்சியை நீக்கிக்கொள்ளத்தக்க வகையில் சமரசம் ஏற்படுத்த இந்த அரசு உரிய முறைகளை மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்கள்.

மாணவர்களுக்கு ஏற்பட்ட சேதங்களைப் பொறுத்து, இழப்பீடு கொடுப்பது பற்றிய பொதுவான விதியையும் இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது; அதன்படி என்ன செய்யவேண்டும் என்பதையும் அரசு யோசிக்கும்" என்று அண்ணா அவர்கள் மேலும் கூறினார்கள்.

...ன்று சட்டமன்றத்தில் கேள்வி ...ம் முடிந்ததும், எதிர்க் கட்சித் ...வர் திரு. பி. ஜி. கருத்திருமன் ...ந்து, முதலமைச்சர் அவர்கள், ...ந்த 26—3—68 அன்று சட்ட...ல் 82-வது விதியின்கீழ் அளித்த ...க்கையில், துப்பாக்கிச் சூடு ...ந்தது பற்றித் தெரிவிக்கவில்லை என்றும், அதை இந்த அவைக்குத் தெரிவிக்காமல் மேலவையில் அறிவித்தது, இந்த அவையின்மீது நம்பிக்கை கொள்ளாததையே காட்டுகிறது என்றும், குற்றஞ்சாட்டினார்.

"மாணவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கப்படவில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையிலேயே மேற்கண்டவாறு அறிவித்தார்.

மேலும், எதிர்க் கட்சித் தலைவரின் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்து அண்ணா அவர்கள் கூறியதாவது:—

"நான் இந்த அவையில், 82-வது விதியின்கீழ் அளித்த அறிக்கையில், அது வரை நடந்த நிகழ்ச்சிகளைத்தான் தெரிவித்தேன். அதற்குமேல் துப்பாக்கிச்சூடு நடைபெற்றதால், பிற்பகல் ...டைபெற்ற மேலவைக் கூட்...த்தில், அந்தப்பிரச்சினை எழுப்பப்பட்டதால், அதைத் தெரிவித்தேன்.

மேலும், அன்று நிலவிய பரபரப்பான சூழ்நிலையில், எதிர்க் கட்சித் தலைவர்கூட, 'பேச முடியவில்லை' என்று நா தழுதழுக்கக் கூறினார். நானும் அதே நிலையில்தான் இருந்தேன் என்பதை அவரும் அறிவார். அடுத்த நாளான நேற்றும், நான் அதே நிலையில் தான் இருந்தேன். மேலும் துப்பாக்கிச்சூடுபற்றிய முழுத் தகவலும் கிடைக்காததால்தான் இந்த அவையில் அதுபற்றிக்கூறவில்லையே தவிர, 'மூடி மறைக்க வேண்டும்' என்ற எண்ணம் எனக்குத் துளியும் கிடையாது.

நான், இந்த அவையின் மீதோ, இந்த அவையின் உறுப்பினர்கள் மீதோ நம்பிக்கையற்றிருப்பதாக, எதிர்க் கட்சித் தலைவர் எண்ணிப் பார்ப்பதைக்கூட நான் மிகவும் சங்கடத்துடன் உணருகிறேன்.

இந்த அவையின் மீதும் சரி—மேலவையின் மீதும் சரி—நான் மிகுந்த நம்பிக்கையும், மதிப்பும் கொண்டிருப்பவன் என்பதை எதிர்க் கட்சித் தலைவரே அறிவார்."

[அண்ணாவின் அறிவிப்பு 4-ம் பக்கத்தில் காண்க]

...ம். ஜி. ஆர். காணிக்கை

சென்னையில் நடைபெற்ற வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் விளைவாக மரணமடைந்த பேருந்து ஊழியர் சையதுஉமரின் குடும்பத்திற்கு, புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள், ரூ.5,000 நன்கொடை வழங்கியுள்ளார்.

"பரிதாபத்துக்காளான சகோதரிக்கு இத்தொகையினைக் காணிக்கையாக்குகிறேன்" என்று குறிப்பிட்டு எழுதியுள்ள மடலொன்றில், 'இனி எந்தக் காலத்திலும்—எந்தச் சுற்றுச் சார்பிலும்—எந்தச் சூழ்நிலையிலும் இப்படிப்பட்ட வேதனை தோன்றுதிருக்க முயலுவோமாக' என்றும் சுட்டிக் காட்டி...

ரூ. 55.50 கோடி செலவு ஏன்?

உள்துறை அமைச்சரை மராட்டியத்துக்கு அனுப்பிவிட்டால் என்ன?

மக்களவையில் கேள்வி

"நாடு முழுவதிலும் சட்டமும்—அமைதியும் ஏன் குலைந்திருக்கிறது என்று கேட்டால், 'அதற்கு மாநிலங்கள்தான் பொறுப்பு; சட்டம்—அமைதி மாநிலங்களின் அதிகாரத்துக்கு உட்பட்டது' என்று சொல்வதற்கு மத்திய அரசில், உள்துறை அமைச்சகம் ஏன்? அதற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 55½ கோடி செலவு ஏன்? அதைவிட, உள்துறை அமைச்சர் சவாண், மராட்டியத்துக்கே திரும்பிப் போய் விடலாமே! நாமெல்லாம் அவரை இங்கே பார்க்க முடியாது என்பதைத் தவிர, வேறு என்ன இழப்பு ஏற்பட்டுவிடப் போகிறது?"

என்று மக்களவையில், உள்துறை அமைச்சக மானியக் கோரிக்கையின்மீது பேசுகையில், சுதந்திரா உறுப்பினர் பிலு மோடி கேட்டிருக்கிறார்!

இந்திய அரசின் ஆசை மருமகன்!

சேக் அப்துல்லா பற்றி மக்களவை உறுப்பினர்

"'தேனிலவு'க்கு அனுப்பப்பட்டிருக்கும் ஆசை மருமகன் போலத்தான், காஷ்மீரத்து சேக் அப்துல்லா கருதப்படுகிறார்—மதிக்கப்படுகிறார் — நடத்தப்படுகிறார்"

என்று, மக்களவையில் பேசிய உறுப்பினர் ஏ. ஸ்ரீதரன் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

"மற்ற குடிமக்களுக்குக் காட்டாத சிறப்பான உபசரிப்பை இந்திய அரசு சேக் அப்துல்லாவுக்குக் காட்டிவருகிறது; அவர் சிறை வைக்கப்பட்டதும் ஒரு மாளிகையில்தான்! அந்த மாளிகையில் அவர் நடத்தப்பட்டதும் ஆடம்பரமான வசதிகளுடன் தான்!"

என்று குறிப்பிட்ட ஸ்ரீத... மேற்கொண்டு பேசுகையில் ...றியதாவது:—

"பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக்கூடத் தலைமையமைச்சர் அவ்வளவு நேரம் ஒதுக்குவது கிடையாது; ஆனால் சேக் அப்துல்லாவைச் சந்திக்க விரும்பினால் மட்டும் அவருக்காக மணிக்கணக்காக நேரத்தை ஒதுக்குகிறார்—பேட்டி கொடுக்கிறார்!"

அறிவிப்பு

நாளை நமது அலுவலகத்திற்கு விடுமுறை; 'நம் நாடு' அடுத்த இதழ், 30—3—68 அன்று சென்னையிலும், மறு நாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்.

என். சி. சி. ஆணைச் சொற்கள்

தமிழக அரசின் கருத்தை டில்லி எதிர்பார்க்கிறதாம்

சென்னை, மார்ச் 27—

"என் சி.சி.-யில் ஆணைச் சொற்களுக்கு இந்தியைப் பயன்படுத்துவது சம்பந்தமாக தமிழக அரசு தெரிவித்துள்ள யோசனையின்மீது மத்திய அரசின் கருத்துக்கள் அந்த மாநில அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது; இதுபற்றித் தமிழக அரசின் கருத்தை இந்திய அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது"

என்று பாதுகாப்புத்துறை துணையமைச்சர் எம். ஆர். கிருஷ்ணா, மக்களவையில், கழக உறுப்பினர் சி. சிட்டிபாபுவின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இராசபாளையத்தில் தொழிலாளர் அறப்போர்

இராசபாளையம் 'சானகிராம் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்' நிர்வாகிகள், கடந்த சுமார் 2 ஆண்டுக் காலமாகத் தொழிலாளர்களைப் பட்டினி போடுவதே தங்கள் திறமை எனக் கருதுகின்றனர் போலும்!

கடந்த சனவரி முதல் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கவில்லை; மேலும் தொழிலாளர்களின் கூட்டுறவு ஸ்டோரில் சரியாக வாரத்துக்கு வாரம் அரிசி விநியோகம் செய்யாமலும் இருக்கிறார்கள். இந்தக் கொடுமையை ஆலை நிர்வாகிகளோ, பங்குதாரர்களோ நினைத்துக்கூடப் பார்க்காமல் இருக்கின்றனர்.

ஆலை நிர்வாகிகளும்—தொழிலாளர்களும் தங்களுக்குள் நிலவும் கருத்து வேறுபாடுகளைச் சுமூகமான முறையில் பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டிய இக்காலக் கட்டத்தில், மேற்படி ஆலை நிர்வாகிகள், கடந்த இரண்டு மாதக் காலமாகச் சுமார் 350 தொழிலாளர்கள் சம்பளத்தைக் கொடுக்காமல், தொழி...ளர்களையும்—தொழிலாளர்க... குடும்பங்களையும் பட்டினிப் போட்டு வருகின்றனர்.

தங்... ...ளத்தை உடன் வழங்க வே...ம் எனக் கோரிக்கை எழுப்பியும், சுமூகமான முறையில் பேச்சுவார்த்... நடத்தியும் பலன் இல்லாததால் 22-3-68 முதல் உண்ணுநோன்... இருந்து...

காதில் விழுந்தது!

பழைய காங்கிரசுக்காரர்:—"கடைசியில் நம்ம அழகேசனை எங்கேயோ அனுப்பி விட்டார்களே?"

புதிய காங்கிரசுக்காரர்;—"ஆமாம்; நான் கூடக் கேள்விப்பட்டேன்; எதியோபியா என்ற நாட்டுக்கு இந்தியாவின் தூதுவராகப் போகிறாராம்! இதுதான், தமிழ்நாட்டுக் காங்கிரசுக்கு இந்திரா செய்த உபகாரம் போலிருக்கிறது!

ப. கா.:—"ஏனப்பா—ஏன் வருத்தப்படுகிறாய்? நல்ல பதவிக்குத்தானே போகிறார்?"

பு. கா.:—"பதவி நல்லதோ இல்லையோ—முடிவு சரியில்லை; அவரையும் அனுப்பி விட்டால் இங்கு பேசுவதற்கு வேறு ஆள் யார் இருக்கிறார்கள்?"

ப. கா.:—"ஏன்? இருப்பவர்களெல்லாம் பேச்சாளர்களாகத் தென்படவில்லையா உனக்கு?"

பு. கா.:—"இருப்பவர்களில் பேச்சாளர்கள் இருக்கலாம்; இருந்தாலும், அவரைப் போல் பேசுபவர்கள் எவர் இருக்கிறார்கள்?"

ப. கா.:—"போகட்டும்; அதற்குத்தான் அவரை வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்கள். அப்படியெல்லாம் பேசியதனால்தானே, 'இனி இவரை இங்கு விட்டு வைத்தால், கட்சிக்கு ஆபத்து' என்று எண்ணி, ஒருவழியாக வெளியே அனுப்புகிறார்கள்? அதெல்லாம் உனக்குத் தெரியவேண்டாம்!"

—எஸ். ஆர்.

மூடப்பட்ட ஆலைகளை அரசு ஏற்கும்

ஆலை நிர்வாகிகளுக்கு தமிழக அரசு 'முன்னறிவிப்பு'

சென்னை, மார்ச் 27—

கோவை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள 6-ஆலைகளில் சீராக உள்ளவற்றைத் தமிழக அரசு ஏற்கும்.

முதலமைச்சர் அண்ணா—தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்—தொழிலாளர் நலத்துறை அமைச்சர் செ. மாதவன் ஆகியோரை, தென்னிந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகளும், தொழிலாளர் தலை...களும் சந்தித்தபோது இம்மு... செய்யப்பட்டது.

"அரசு ஏன் இவ்வாறு ...வடிக்கை எடுக்கக்கூடாது" ...பதற்குக் காரணம் காட்டும... அந்த ஆலைகளுக்கு நோட்... அனுப்பப்படும்.

மரியாதை தெரியாத சீனத் தூதுவர்!

"கடந்த ம...ச் 7-ம் நாள் வெளிவிவகா... அமைச்சகத்துக்கு வந்து ...ல்லுமாறு கோரப்பட்டிருந்த இந்திய அரசின் குறி... ஒன்றினை அலட்சியம் செ... அந்தத் தேதியில் வர... அடுத்த நாள் வந்த செஞ்சீ... தூதுவரக அதிகாரியின்... கண்டனமும், எச்சரிக்கை... தரப்பட்டிருக்கிறது"

என, மக்களவையில் த... ...ர் இந்திரா தெரிவி...

நம் நாடு

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ.

திருவள்ளுவராண்டு 1999 பங்குனி 15 (28—3—68) வியாழன்

இது என்ன அரசியல் அறமோ?

நான்காவது பொதுத் தேர்தலுக்குப் பின்னர், ஓர் அரசியல் கட்சியின் வேட்பாளராகத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பின்னர், வேறு ஓர் அரசியல் கட்சிக்கு மாறி விடுகின்ற அரசியல் கூத்து நித்திய நிகழ்ச்சியாகிவிட்டது. இதன் விளைவாக, அரசுப் பொறுப்பேற்றுக்கொள்ளுகின்ற ஓர் அரசியல் கட்சி, அப்பொறுப்பில் நீண்ட நாட்களுக்கு இருந்திட முடிவதில்லை. அரசுப் பொறுப் பேற்கின்ற அதேநேரத்தில், அக்கட்சி அரசின் வீழ்ச்சிக்குரிய நாளையும் எதிர்நோக்கிக்கொண்டிருக்க வேண்டியுள்ளது.

பஞ்சாப், உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் ஆட்சிப் பொறுப்பேற்ற அரசியல் அமைப்புக்கள், இக் கட்சி மாறுகின்ற அரசியல் கூத்தின் காரணமாகவே அடுத்தடுத்து அரசுப் பொறுப்பிலிருந்து விரட்டப்பட்டுவிட்டதைக் கண்டோம். இப்படி, தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்னர், சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி விட்டு கட்சி மாறுவதனால் ஆட்சிப்பொறுப்பு, ஒரு கட்சியிடமிருந்து மற்றொரு கட்சிக்குக் கைமாறிவிடுவதுடன், நிலையான ஆட்சி அமைப்பும் அருபொருளாகி விடுகிறது; இதன் விளைவாக, நிர்வாகச் சீர்குலைவு தலைதூக்கிவிடுகிறது.

குறிப்பிடத்தக்க அளவுக்குக் காங்கிரசுக் கட்சி மட்டுமே பெரியதோர் அரசியல் கட்சியாக இருந்து, மற்ற அரசியல் கட்சிகள் அனைத்தும் வெறும் பெயரளவு கட்சிகளாக இருந்துவந்த நிலைக்கு, நான்காவது பொதுத்தேர்தலில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. பல மாநிலங்களில் காங்கிரசுக் கட்சி சிறுபான்மைக் கட்சியாகவும், மற்ற அரசியல் கட்சிகள் அனைத்தும் கூட்டாக இணைவதன் மூலம் ஆட்சிப்பொறுப்பை ஏற்கத் தகுதிவாய்ந்த பெரும்பான்மை கட்சியாகவும் மாற்றம் பெற்றன.

இப்படி, காங்கிரசுக் கட்சிக்கு எதிராக மற்ற அரசியல் கட்சிகள் கூட்டுச் சேர்ந்தும், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவதற்குத் தேவைப்படக்கூடிய எண்ணிக்கையைப் பெறவில்லையானால் அமைச்சர் பதவியைக் காட்டிக் காங்கிரசுக் கட்சியிலிருந்து சிலரை வெளியேற்றித் தங்களுடன் சேர்த்துக்கொண்டு, ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றுகின்ற கூத்தும் நடைபெறலாயின! இதுவுமன்றி, ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கின்ற கட்சியிடம் தாங்கள் விரும்பிய பதவியைக் கோரி மிரட்டுவதையும், கோரிய பதவி தரப்படவில்லையானால் கட்சியை விட்டு விலகி, அக்கட்சி ஏற்றுக்கொண்டிருந்த ஆட்சிப் பொறுப்பைச் சிதைத்துவிடும் பெரும் பணியையும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மேற்கொள்ளலாயினர்.

கட்சி விட்டுக் கட்சி மாறுவது என்பது, ஒருவர் கொண்ட கொள்கை அடிப்படையில் நிகழ்வதாக இருந்திடும்பட்சத்தில், அதைக் குறைகூறுவதற்கில்லை. அப்போக்கு, ஆதரித்து வரவேற்கத்தக்கதாகும். ஆனால், இப்பொழுது ஏற்பட்டுவருகின்ற கட்சி மாற்றங்கள் அனைத்தும், அமைச்சர் பதவியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருப்பதாகும். இப்பொதுப் போக்கிற்கு இரண்டொன்று விலக்காக இருந்திடக்கூடும்.

ஓர் அரசியல் கட்சியின் பெயரால் தேர்ந்தெடுக்கப்பட்டவரை தனது கட்சியைச் சேர்ந்தவராகப் பின்னர் ஆக்கிக்கொள்ளுகின்ற அரசியல் கூத்துக்கு முதன்முதலாக வித்திட்ட பெருமை முழுவதும் காங்கிரசுக் கட்சிக்கே உரித்தானதாகும். இதில், மற்ற அரசியல் கட்சிகளுக்கு ஏற்கனவே சிறிதளவு தொடர்பும் கிடையாது.

தனக்கு இலாபகரமாக இருக்கின்றவரையில், கட்சி விட்டுக் கட்சி மாறும் இந்த அரசியல் கூத்தை ஆதரித்து வளர்த்துவந்த காங்கிரசுக் கட்சி, அதே அரசியல் கூத்து தனக்குப் பெரும் இழப்பளிப்பதைக் கண்டதும், அக்கூத்துக்கு எப்படி முற்றுப்புள்ளி வைப்பது எனப் பெருங் கவலையுடன் ஆராயத் தொடங்கியுள்ளது. இதற்காக, உள்துறையமைச்சர் சவான் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

அந்த உயர்மட்டக் குழுவின் முதற் கூட்டமும் நடைபெற்றிருக்கிறது. அந்த முதல் கூட்டத்தில், கட்சி விட்டுக் கட்சி மாறுவதைத் தடுத்துநிறுத்த அரசியல் கட்சிகளுக்குள்ளாகச் செயல்முறைத் திட்டம் ஒன்றை உருவாக்குவதா அல்லது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் திருத்தம் செய்து அதற்குரிய ஏற்பாட்டைச் சட்டப்படி செய்வதா என்பது பற்றி ஆராயப்பட்டிருக்கிறது. இது ...ற்றி, குழுவினருக்குள் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை; இத்து...ன் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இதேநேரத்தில், புதுச்சேரியில் காங்கிரசுக் கட்சி செயல்பட்டிருக்கின்ற முறையை, இக்குழுக் கூட்ட நிகழ்ச்சியுடன் தொடர்புபடுத்தி ஆராய வேண்டும். கட்சிவிட்டுக் கட்சி மாறுவதனால் ஏற்படுகின்ற தீமைகளைக் குறித்து மிகுதியும் கவலைப்படுவதாகக் காட்டிக் கொள்ளுவது காங்கிரசு மேலிடம்தான். கட்சிவிட்டுக் கட்சி மாறுகின்ற போக்கால் மிகுதியும் பாதகமடைகின்ற கட்சி இன்று காங்கிரசுக் கட்சியாக இருப்பதால், அதுபற்றி மிகுதியான கவலை அதற்கு இருப்பது இயல்பே ஆகும்.

ஆனால், புதுச்சேரியில் நடைபெற்றிருப்பது என்ன? அங்கு ஏற்கனவே வெங்கடசுப்பா ரெட்டியாரை முதலமைச்சராகக் கொண்ட காங்கிரசு அமைச்சரவைதான் இருந்தது. இந்த அமைச்சரவைமீது, அங்கி...ந்த எதிர்க் கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்...ந்தனர். அதே நேரத்தில், ரெட்டியார் ...மைச்சரவையில் நி... அமைச்சராக இருந்துவந்த காங்கேயன், ... காங்கிரசு சட்ட...ன்ற உறுப்பினர்களுடன் கா...ங்கிரசுக் ...யைவிட்டு வெளியேறி எதிர்க் கட்சியினருடன் சேர்ந்து ...ண்டார். இது பழைய நிகழ்ச்சி.

இப்பொழுது மீண்டும், முதலமைச்சராக ...ருந்துவந்த பரூக் ...ரக்காயரைப் பதவியிலிருந்து விலக்கி அப்பதவியில் மீண்டும் ...ங்கடசுப்பா ரெட்டியாரை ஏற்றி... ...க்க வேண்டும் என, எது ...ணம் பற்றியோ காங்கிரசு ...மலிடம் விரும்பியது. இவ்விருப் ...தை நிறைவேற்றிக்... ...ந்த ஒரே வழி... வெங்கடசுப்பா ...யாரை முதல... ...லிருந்து ... ...கு, தாம் காங்கிரசுக் கட்சியிலிருந்து விலகி எதிர்க் கட்சியுடன் சேர்ந்து கொள்ளுவதன்மூலம் வாய்ப்பைத் தேடித்தந்த காங்கேயன் அவர்களை மீண்டும் காங்கிரசுக் கட்சிக்குள் சேர்த்துக்கொண்டு, முன்னர் பெற்றிருந்த நிதி அமைச்சர் பதவியை மறுபடியும் அவரிடமே கொடுப்பதுதான்.

இந்த ஒரே வழியைக் காங்கிரசு மேலிடம் கையாண்டதன் மூலம் ...றுபடியும் வெங்கடசுப்பா ரெட்டியார் புதுச்சேரி முதல் அ...சராக ஆக்கப்பட்டார். அதே நேரத்தில், மறுபடியும் காங்கேயன் அவர்கள் காங்கிரசுக் கட்சிக்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டு நிதி அமைச்சராகவும் ஆக்கப்பட்டிருக்கின்றார்.

கட்சி விட்டுக் கட்சி மாறுவதைத் தடுத்துநிறுத்தக் காங்கிரசு மேலிடம் ஆராய்ந்துகொண்டிருக்கிறது; அதேநேரத்தில், சொந்தக் கட்சியை ஆட்சிப் பொறுப்பில் நிலைத்திருக்கச்செய்ய, கட்சி விட்டுக் கட்சி மாறுவதற்கு ஊக்கமளித்தும் வருகிறது! இது என்ன அரசியல் அறமோ!

—கா. ந.

அண்ணாவுக்கு ஆந்திர முதல்வர் நன்றி

ஐதராபாத், மார்ச் 26—

ஆந்திர கேசரி டி. பிரகாசம் உருவச்சிலையைச் சென்னை உயர்நீதி மன்றம் எதிரில் நிறுவத் திட்டமிட்டுள்ள தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு, ஆந்திர முதலமைச்சர் திரு. பிர்மானந்தரெட்டி நன்றி தெரிவித்துள்ளார்.

இங்குள்ள ஆந்திரச் சட்டமன்றக்கட்டிடத்தின் எதிரில் டி. பிரகாசத்தின் முழு உருவப்படத்தை நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் திரு. சஞ்சீவி ரெட்டி திறந்து வைத்தார்.

அந்த விழாவில் கலந்துகொண்டு பேசுகையில்தான், திரு. பிர்மானந்தரெட்டி, மேற்கண்டவாறு குறிப்பிட்டு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

வெளிச்சந்தையில் விலையேற்றம்

தவிர்க்கத் தமிழக அரசு கடைபிடிக்கும் கொள்கை

சென்னை, மார்ச் 26—

"நெல் நீங்கலாக ஏனைய உணவுத் தானியங்களின் (கம்பு, சோளம் போன்றவை) வெளிச் சந்தை விலைகளைக் கட்டுப்படுத்த முயன்றால், அவற்றைப் பயன்படுத்தும் மக்களிடையே ஒரு பீதி ஏற்படுவதுடன், 'அவற்றுக்குச் செயற்கைப் பஞ்சமும் ஏற்பட்டுவிடக்கூடும்' என அரசு கருதுகிறது.

"ஆயினும், நிலைமையை அரசு, எப்போதும் கூர்ந்து சவனித்து வருகிறது; மார்க்கெட்டில் அவற்றின் விலைகள் ஏறிக் கொண்டே இருந்தால், அதைக் கட்டுப்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்"

என்று, உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், சட்டமன்ற மேலவையில் தெரிவித்தார்.

மத்திய அரசு நிர்ணயித்தஅளவே உணவுப் பங்கீடு

அமைச்சர் மதியழகன் விளக்கம்

சென்னை, மார்ச் 27—

"கோவை நகரில் புதிய உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்கப் பட்டு வருகிறது.

"சென்னையிலும் கோவையிலுமாக ஏறக்குறைய 30 இலட்சம் பேர் உணவுப் பங்கீட்டு முறை மூலம் பயனடைந்து வருகின்றனர்.

"ஒரு நபருககு 1400 கிராம்தான் உணவுப் பொருள் வழங்க வேண்டும் என்று மத்திய அரசு நிர்ணயித்துள்ளதால் அந்த அளவுக்குத்தான் வழங்கப்பட்டு வருகிறது.

உரிய அளவு கோதுமையும் கொடுக்சப்பட்டால் போதுமானதாக இருக்கும்'

என்று, சட்டமன்றத்தில், உணவு அமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் தெரிவித்தார்.

காங்கிரசு ஆட்சியாளரால் மறுக்கப்பட்டுவந்த கோரிக்கை

கழகஆட்சியில் ஏற்கப்பட்டதுகண்டு மகிழ்ச்சி— தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி நன்றி

தஞ்சை மாவட்ட ஆசிரியர் கூட்டணியின் பொதுச்செயலாளர் திரு க. மீனாட்சிசுந்தரம் அறிவிப்பதாவது :—

'தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் இருபது ஆண்டுக்காலக் கோரிக்கை, 'தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் மேலவையில் பிரதிநிதித்துவம் தேவை' என்பதாகும். இக்கோரிக்கையை இன்றுவரை மத்திய அரசும்—தமிழகத்தின் முன்னாள் அரசும் ஏற்கவில்லை; மாறாக, 'உயர்நிலைப் பள்ளி, ஆசிரியர்களுக்குள்ள மேலவை பிரதிநிதித்துவத்தை நீக்கிவிடவேண்டும்' என அவ்வரசுகள் கூறிவந்தன.

"ஆனால், இன்றையத்தினம், தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்துள்ள புதிய அரசின் அமைச்சரவை, ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று, 'தமிழக மேலவைக்கு ஆசிரியர் தொகுதியில் வாக்காளர்களாகத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களையும் சேர்ப்பது' என்று முடிவு செய்துள்ளது. இந்த நல்ல செய்தி தமிழக எல்லையுறு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் இன்பம் பயப்பதாகும். இச்சிறந்த முடிவை எடுத்த தமிழக அமைச்சரவைக்கு தஞ்சை மாவட்ட ஆசிரியர் கூட்டணியின் சார்பில் வாடாத நன்றியை உரித்தாக்குகின்றேன்.

"மேலும், ஆசிரியர் தொகுதிகளை கல்லூரி ஆசிரியர்கள் தொகுதி —உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் தொகுதி — தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தொகுதி— என மூன்று பிரிவுகளாகப் பிரித்து, இம்மூன்று பிரிவினருக்கும் சமவாய்ப்புக் கிடைக்கத்தக்க நடவடிக்கைகளையும், இந்திய அரசியல் சட்டத்திலேயே, 'தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் மேலவை வாக்குரிமை உண்டு' என்ற வாசகத்தைச் சேர்ப்பதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேணுமாய் தமிழக அரசை மிகவும் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்."

காங்கிரசுத் தொழிற் சங்கத்திலிருந்து 121 பேர் விலகல்

முன்னேற்றச் சங்கம் அமைத்தனர்

காரைக்கால், மார்ச் 25—

நெடுங்காட்டில் உள்ள சௌந்திராஜா ஆலையில் வேலை பார்த்து வரும் தொழிலாளர்களுககும்—ஆலை நிர்வாகத்தினருக்கும் கடந்த பத்து நாட்களாகத் தகராறு நடக்கிறது.

'ஜெயராமன் என்ற தொழிலாளியை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்' என்று தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமல் வற்புறுத்துகின்றனர். புதுவைத் தொழிலாளர் சமரச அதிகாரி நடத்திய பேச்சு வார்த்தை தோல்வியடைந்தது.

'காங்கிரசுத் தலைமைத் தொழிற்சங்கம் சரியான முறையில் போராடவில்லை' என்று மனமுடைந்த 121 தொழிலாளர்கள், அதைவிட்டு வெளியேறினர்கள்.

23—3—68 அன்று நெடுங்காட்டில் காரை வட்ட வழக்கறிஞர் எஸ். இராமசாமி, ப. அ. கரீம், மற்றும் கழகத் தோழர்கள் முன்னிலையில் தொழிலாளர்கள், 'திராவிட நூற்பாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்' என்ற அமைப்பை நிறுவினர்.

தொழிற்சங்கத் தலைவராக வழக்கறிஞர் எஸ். இராமசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வீரப்பன்சத்திரத்தி... தீ விபத்து...

கழகத் தோழர்களின் உதவிப் பணம்

வீரப்பன்சத்திரம் அண்ணா... 2-ல், கடந்த 16—3—68 ... 3 மணியளவில் 5 குடிசைகள் தற்... செயலாக தீப்பிடித்துக்கொண்டன...

உடனே கழகத் தோழர்களும், எம்.ஜி.ஆர். மன்றத்தினரும் சேர்ந்து தீயை அணைத்துத் தக்க பாதுகாப்புக் கொடுத்து உதவினர். குடிசைகள் அடியோடு அழிந்துவிட்டன.

வீரப்பன்சத்திரம் பேரூராட்சி மன்றத் தலைவர் எம். இராமசாமி துணைத் தலைவர் வீ கே. மாரிமுத்து கிளைக் கழகச் செயலாளர் ஆ... தேவராசன் ஆகியோர் தாலுகா அலுவலகம் சென்று, தீப்பிடி... வீட்டுக்காரர்களுக்கு அரசாங்... பணம் கிடைக்க ஆவன செ... துடன், ஊருக்குள் ரூ. 250 வ... செய்து உதவினர்.

இலஞ்ச ஊழல் புரி... அரசு அதிகாரிகள்...

சென்னை, மார்ச் 27—

"இலஞ்ச ஊழல் குற்றம் புரிந்ததற்காக 1965-ஆம் ஆண்டு அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகள் 4-பேரும், பதிவுபெறுதவர்கள் 20-பேரும், 1966-ல் பதிவு பெற்ற அதிகாரிகள் 9-பேரும், பதிவுபெறுதவர்கள் 25-பேரும் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளானர்கள்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

தாழ்த்தப்பட்டோர் விடுதியில் பின்தங்கியவர்களுக்கு இடம்

"தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதிகளில், தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் நிரப்பப்படாமல் இருந்தால், அந்த இடங்களில் பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் சேர்த்... கொள்ளப்படுவர்; ஆனால் ... ஆண்டுக்கு மட்டுமே அவ... இருக்கலாம்—நிரந்தரமா... இருககமுடியாது"

என்று, செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, சட்டமன்றத்தில் ஒருகேள்விக்குப் பதிலளித்தார்.

பொய்ச் செய்திக்கு மறுப்பு

16—3—68 'தினமலர்' என்ற ஏட்டில் 'தி. மு. க. ஆட்சிக் கருத்தரங்கு' என்ற தலைப்பில், சண்முகம், நடராசன், சம்சுதீன், சுப்பையா ஆகியோர் கலந்துகொண்டனர் என்ற தவறான செய்தி வந்துள்ளது; அவர்கள் கலந்துகொள்ளவுமில்லை—அவ்வித நிகழ்ச்சி பற்றியும் தெரியாது.

"அந்தச் செய்தி வெளிவரக் காரணமானவர்கள்மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறோம்" என்று, கடையநல்லூர் நகர தி. மு. க. செயலாளர் சி... ராசன் அறி...க்கிறார்.

புதுவையில் காங்கிரசுக்காரர் வெறியாட்டம்!

கழகத் தோழர் வெட்டப்பட்ட கொடுஞ்செயல்

புதுவை — சோரியாங்குப்பம் தி. மு. கழகச் செயலாளர் தா. பார்த்தசாரதியை, சோரியாங்குப்பம் காங்கிரசுக் கவுன்சிலர் கோபால் என்பவரும், மற்றும் சில குண்டர்களும் சேர்ந்து, கத்தி—கம்பு போன்ற ஆயுதங்களால் தாக்கினர்; 21—3—68 இரவு சுமார் 9-30 மணிக்கு இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

தோழர் பார்த்தசாரதியின் தோளுக்குக்கீழ் 4 அங்குல அளவில் எலும்பு வரை கைவெட்டப்பட்டது; உடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இதுபற்றிப் புகார் கொடுக்க பாகூர் காவல் நிலையத்திற்குக் கழகத் தோழர்கள் சென்றபோது, காவல் துறையினர் அங்கு இல்லை; 'நாளை வாருங்கள்' என்று கூறிவிட்டனர்.

வன்முறைச் செயலில் ஈடுபட்டவர்கள் தலைமறைவாகிவிட்டனர்.

இச்சம்பவம் பற்றிக் கேள்வியுற்றதும் வட்டச் செயலாளர் எம். ஏ. சண்முகம், செயலாளர் பார்த்தசாரதியைக் காணச் சென்றுர்; மயக்கமுற்ற நிலையில் இருந்த அவரைக் கண்டு கண்கலங்கினர்.

புதுவையில் காங்கிரசுக்காரர்கள் சில காலமாகவே வன்முறைச் செயல்களை கட்டவிழ்த்துவிட்டுள்ளனர்; காவல் துறையினரோ, கண்டும் காணுதவர்களாக இருக்கிறர்கள்.

இங்கிலையில் கழகத் தோழர்கள் அண்ணு அவர்களின் மூலமந்திர மான கடமை — கண்ணியம் — கட்டுப்பாடு ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு, எந்தவித வன்செயலுக்கும் இடம் தராமல் இருந்துவருகின்றனர்.

மாயனூரில் கழகப் பொதுக்கூட்டம்

25—3—68 மாலை 7 மணியளவில் மாயனூர் தி.மு.க. சார்பில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் இராமநாதன் தலைமைதாங்கினர்; தோழர்கள் அங்கப்பன், கே. ஜி உமாகாந்தன் ஆகியோர் பேசியபின் தோழர் பரமத்தி சண்முகம் கழக ஆட்சியின் ஓராண்டு சாதனைகள் குறித்தும், மொழிப்பிரச்சினையில் காங்கிரசாரின் தடுமாற்ற நிலையைக் குறித்தும், காமராசர் இடத்துக்கு இடம் மாறுபட்ட கருத்துக்களைக் கூறி வருவதைக் கண்டித்தும் பேசினர்.

உசிலம்பட்டியில் நகர் நலக் குழு

உசிலம்பட்டி மார்ச் 22— நகர் தி. மு. க. செயலாளர் பி. எஸ். மாணிக்கம் தலைமையில் நகர் நலக் குழு அமைக்கப்பட்டது.

கள்ளக் கடத்தலைத் தடுத்தல்—விலைவாசி ஏற்றத்தைக் குறைத்தல்—தமிழக அரசினர் திட்டத்தைச் செயல்படுத்தல்—முதலிய பணிகளில் அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளவும், தகுந்த நடவடிக்கை எடுக்கவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

நகர் நலக் குழுத் தலைவர்: இராமசாமி (போத்தம் பட்டி); துணைத் தலைவர்: உசிலை பாண்டியன்; உறுப்பினர்கள்: அழகர்சாமி, அய்யாவு, சின்னுத் தேவர், ஜெகநாதன், சிவன்காளை, தங்கராசு, காசிமாயன், இராமராசு, நடராசன், பி. எஸ். மாணிக்கம்.

கலைக் குழு முகவரிகள்

அ. தமிழரசு,
செல்வி பானு கலைக்குழு,
காமராஜர் நகர் (குளம்),
அரியமங்கலம், தஞ்சை ரோடு
திருச்சி.

வள்ளுவர் கலைக் குழு, முத்து இராசு குழுவினர் அளிக்கு 'அண்ணுவின் ஆட்சி' என்னு கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்பு கொள்க:—

கே. பி. முத்து,
12, இராமசாமி முதலித் தெரு,
தேனும்பேட்டை, சென்னை-1.

எம். ஜி. ஆர். கலைக் குழுவினர் நாஞ்சில் இராசா-தேவிகா பங்கேற்கும் 'ஏழை அழுத கண்ணீர்' என்ற கலை நிகழ்ச்சி நடத்த விழைவோர் தொடர்பு கொள்க:—

வி. பொன்னுசாமி,
மணிமேகலை தேநீரகம்,
600, திருவல்லிக்கேணி
நெடுஞ்சாலை, சென்னை-5.

ஒவ்வொரு ஆண்டும் ரூ. 6,250 கோடி மதிப்புள்ள 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் விற்கவும் வாங்கவும் படுகின்றன

நம் நாட்டில் தகரம், பிளாஸ்டிக், அட்டைப்பெட்டிகள் அதிகரிக்காவிட்டால் அன்ருட உபயோகப் பொருட்கள் கிடைப்பதே அரிதாகிவிடும்

வனஸ்பதி அல்லது பற்பசை வாங்கும்போது, நீங்கள் வனஸ்பதி டின்னையோ, பற்பசை ட்யூபையோ பற்றிச் சிந்திக்கமாட்டீர்கள், அது சகஜம். அந்த டின்னே அல்லது ட்யூபோ இல்லாவிடில் வனஸ்பதியோ பற்பசையோ கிடைக்குமா? கிடைத்திருக்காது. நம் நாட்டின் ஒவ்வொரு மூலைகளிலும் உள்ள இடங்களுக்கு ஏராளமான அளவுகளிலும், பாதுகாப்பாகவும், கலப்படமில்லாமலும் இப்பொருட்களை அனுப்ப 'பாக்' செய்யும் வசதி இல்லாமல் முடியாது.

அன்ருட வாழ்வில் 'பாக்கேஜிங்' பணி சிறியதல்ல என்பது இதனுல் விளங்கும். மேலும் அன்ருடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி பெருகப் பெருக பாக்கிங் சாதனங்களான டின்களும், பிளாஸ்டிக் ஜாடிகளும், அலுமினிய ட்யூபுகளும், அட்டைப் பெட்டிகளும் அதிகரிக்கவேண்டும்.

இவை பெல்லாவற்றையும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் தயாரிக்கின்றனர். இந்தியா முழுவதும் உள்ள தங்கள் 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் அன்ருட உபயோகப்பொருட்களுக்கு தேவையான 'பாக்கிங்' வசதிகளை அளிக்கின்றனர். பொருட்களை விஞ்ஞான ரீதியில் சோதித்து, அவற் [illegible] 'பாக்கிங்' முறைகளைச் சிபாரிசு செ[illegible] பாக்ஸ் கம்பெனியர் அளிக்கும் [illegible] செய்வதில் வெளிநாட்[illegible] புரிகிறது.

அன்ருடத் தேவைப் [illegible] அதிகரிக்க வேண்டும [illegible]

சீர்திருத்தப்பட்ட சிறந்த 'பாக்கிங்' வசதிகளை தாராளமாக அளிக்கவேண்டும் என்பதே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் குறிக்கோள். இந்த நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஊக்க மளிக்கிறது.

MB
[illegible]ல் பாக்ஸ்
[illegible]க்கிங்

கடமையின் வழிநின்று செயலாற்றுவோம்'

முதலமைச்சர் அண்ணு அறிவிப்பு

சென்னை, மார்ச் 27—

"அன்றும் இன்றும், மாணவர்கள்—தொழிலாளர்கள்—சமூகத்தின் பிற பகுதியினர்—யாராக இருந்தாலும்—அவர்களின் கோரிக்கை நியாயமாக இருந்தால்—சரியானவற்றை ஏற்பது—எவருக்கு இடுக்கண் ஏற்பட்டாலும் அதைத் துடைப்பது—மோதுதல் ஏற்பட்டால் அதைத் தடுப்பது—அதையும் மீறி நிலைமை கட்டுக்கடங்காமல் போனுல் தக்க தடுப்பு முறைகளை மேற்கொண்டு நீதியை நிலைநாட்டுவது—பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் அளிப்பது—ஆகியவைகளையே இந்த அரசு தனது கடமையாகக் கொண்டு செயலாற்றி வருகிறது.

"எந்த ஒரு நிகழ்ச்சியும் நடைபெறும்போது எந்த அரசும் அதை—ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்துக்குப் போகாமல் தடுக்கவே முயலும்; ஆனுல், மின்னல் வேகத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறுகையில், 'அதைக் கட்டுப்படுத்தவில்லையே' என்று கூறப்படும் வாதம் ஏற்கக்கூடியதன்று!

"அகல் விளக்கு நன்ருக எரியவில்லை என்ருல், எண்ணெய் ஊற்றலாம்; மங்கலாக எரிவதாக இருந்தால் தூண்டிவிடலாம்; ஆனுல், மின்னலை அப்படிச் செய்ய முடியாது; எதிர்பாராது கணநேரத்தில் தோன்றி மறையும் மின்னலை எந்த விதத்திலும் யாராலும் கட்டுப்படுத்த முடியாது; அதுபோல், மின்னல் வேகத்தில் காரியம் நடைபெறுகின்றபோது, நம்மால் முடிந்தவைகளைத்தான் செய்ய முடிகிறது!

"கலகம் பரவ வேண்டுமென்ருே, குழப்பங்கள் நிலவ வேண்டுமென்ருே எந்த அரசுக்கும் எண்ணம் இருக்காது; அதிலும் குறிப்பாக நான் பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, இதுபோன்ற சம்பவங்கள் ஏற்பட்டால் எவ்வளவுக்கு நான் மனத்திலேயே குமுறுபவன்—மன உளைச்சல் அடைபவன் என்பதை அனைவரும் அறிந்த ஒன்ருகும்.

"நிகழ்ச்சிகள் எதனுல் நடந்தன—ஏன் நடந்தன—என்பது, நீதி விசாரணை மூலம் சான்றுகள் தேடப்படும் என நம்புகிறேன்.

"நீதி விசாரணை, இரு தரப்பிலும் வரையறுக்கப்பட்டுள்ள எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியதாக இருக்குமென்பதில் எவருக்கும் ஐயப்பாடு தேவை இல்லை."

இவ்வாறு முதலமைச்சர் அண்ணு அவர்கள், சட்டமன்றத்தில், இறுதித் துணை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதிலளிக்கையில், பேருந்துத் தொழிலாளர்—மாணவர்கள் மோதுதலையொட்டி உறுப்பினர்கள் சிலர் கூறியதற்குப் பதிலளிக்கும் வகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; இதுபற்றி மேலும் அவர் கூறியதாவது:—

"பெரும்பாலோர் மனத்தில் ஊடுருவியுள்ள உணர்ச்சி பற்றிய கருத்துக்கள்—நிலைமைகள் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் எடுத்துரைத்தது, 'அரசு அவற்றைப் பற்றி நடவடிக்கை எடுக்கவில்லை' என்பதற்காக அல்ல—அவர்களுக்கு இருக்கின்ற உணர்ச்சிகளைத் தெரிவித்தார்கள்.

"இருக்கின்ற எவருடைய உள்ள உணர்ச்சிக்கும், 'இந்த அரசின் உணர்ச்சி குறைந்ததல்ல' என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர் என்றே நம்புகிறேன்.

"மாணவர்களுக்கு இந்த அரசு துணைநிற்க வேண்டும்—என்று இப்போது சொல்கிருர்கள்; அதே நேரத்தில், மாணவர்களுக்காக—அவர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத் தீர்மானம் நிறைவேற்றுகிறபோது, 'தவறு' என்கிருர்கள்—மாணவர்களின் மனத்தில் வாட்டும் பிரச்சினையைத் தீர்க்கும்போது, 'தவறு' என்கிருர்கள்.

போலீசு அதிகாரிகளைப் பொறுத்தவரையில், மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன்—மோதுதல்கள் மேலும் பரவாத வகையில்—அதிக அக்கறையுடன் செயலாற்றியிருக்கிருர்கள்.

அவர்களுடைய முயற்சிகளையும் மீறி சம்பவங்கள் நடந்துள்ளதால், 'போலீசார், நடவடிக்கைகள் எடுக்கத் தவறினுர்களா? எந்தெந்த வகையில் முயற்சிகள் மேற்கொண்டிருந்தால், சம்பவங்கள் நிகழாமல் தடுத்திருக்கலாம்' என்பது பற்றியும், விசாரணை நடைபெறுகையில் ஆராயப்படும்."

தொழிலாளரிடம் கூறியது என்ன?

அமைச்சர் கருணுநிதி தரும் விளக்கம்

தவருன பிரசாரம் குறித்து வருத்தம்

சென்னை, மார்ச் 27—

செய்தியாளர்கள் கேள்வி:— "நேற்று நீங்கள் கோட்டை வாயிலில் வந்து கூடிய பஸ் தொழிலாளரிடம் கூறிய கருத்துக்கள், 'மாணவர்களுக்கு எதிரானவை' என்று கூறப்படுவது பற்றி என்ன சொல்கிறீர்கள்?"

அமைச்சர் கருணுநிதி பதில்:— "நான் மாணவர்களுக்கு எதிரான எந்தக் கருத்தையும் அங்கு சொல்லவில்லை. மாணவர்களிடையே அதுபோல ஒரு தவருன பிரச்சாரம் சிலரால் செய்யப்படுகிறது என்ருல், அதற்காக வருந்துகிறேன். கோட்டை வாயிலில் கூடிய தொழிலாளர்கள், நான் பேசிக்கொண்டிருந்தபோது குறுக்கிட்டு, 'இறந்துபோன தொழிலாளியின் உயிருக்குப் பதில் என்ன தருவீர்கள்?' எனக் கேட்டனர்; அப்போது நான், 'உங்களுக்கு, பதிலுக்குப் பதில் ஒரு உயிர் வேண்டுமென்ருல், என் உயிரை எடுத்துக்கொள்ளுங்கள்; உங்கள் நடுவில் வந்து நிற்கிறேன்—என்னைச் சதை சதையாகப் பிய்த்தெடுத்துக் கொள்ளுங்கள்' என்று கூறியது—'தொழிலாளர்களி[illegible]யே மாணவர்களைப் பழிவாங்கும் உணர்ச்சி தோன்றக் கூடாது' என்பத[illegible]

அதைத்தான் [illegible]

களிடம் [illegible]

பேருந்துஊழியர்களின் இறுதி மரியாதை--காணிக்கை

சையத் உமரின் சவ அடக்க ஊர்வலத்தில் கலந்துகொண்ட பேருந்து ஊழியர்கள், அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியதுடன், ஊழியர் ஒவ்வொருவரும் ரூ. 1 விதம் தந்துதவியதன் [illegible]

தமிழகக் காகித ஆலைகளின் சங்கட நிலை

விலை நிர்ணய உரிமை மத்திய அரசிடம் இருப்பதே காரணம்

சென்னை, மார்ச் 27—

"நெல்லை மாவட்டம் சாத்தான்குளத்திலும், பரமன்குறிச்சியிலும் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் இல்லை"

என்று தொழிலமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தார்.

மேலும் துணைக் கேள்விகட்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:—

"அந்த மாவட்டததில், முன்பே இரண்டு காகித ஆலைகள் அமைக்க ஏற்பாடாகி ஓர் ஆலை இயங்குகிறது; இன்னெரு ஆலையை பாபநாசத்தில் நிறுவ உரிமம் சேட்கப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள காகித ஆலையும் திருப்திகரமாக இயங்கவில்லை; நட்டம் ஏற்படுகிறது. இதற்குக் காரணம், காகிதத்தின் விலையை நிர்ணயிக்கும் உரிமை மத்திய அரசிடம் இருப்பதுதான்.

"கடந்த ஐந்தாண்டுக் காலமாகக் காகிதங்களின் விலை ஒரே அளவில் இருக்கின்றன; ஆனுல் உற்பத்திச் செலவு கூடிக்கொண்டு வருகிறது.

"பாபநாசம் பகுதியில் புதிதாக அமைக்கவிருக்கும் காகித ஆலையில் 35 டன் காகிதம் உற்பத்தி செய்ய முதலில் திட்டமிடப்பட்டு, பிறகு 10 டன் உற்பத்தி செய்தால் போதும் என்ற முடிவுக்கு வந்திருக்கிருர்கள்."

என். கிட்டப்பா:—"தஞ்சை மாவட்டத்தில் வைக்கோலும், மூங்கிலும் அதிகமாகக் கிடைப்பதால் அங்கு ஒரு காகித ஆலை ஏற்படுத்தப்படுமா?"

அமைச்சர்:—"தஞ்சை மாவட்டத்தில் ஒரு காகித ஆலை ஏற்படுத்தினுல், அந்த மாவட்டத்தில் கிடைக்கும் வைக்கோல்—மூங்கில் முழுமையும் அந்த ஆலைக்கே தேவைப்படக்கூடிய நிலை வருமானுல், பிறகு மாடு தின்பதற்கு வைக்கோலும், வீடு கட்டுவதற்கு மூங்கிலும் கிடைக்காமற் போய்விடும்.

"காடுகளில் கிடைக்கும் மூங்கிலை நம்பி, சேஷசாயி காகித ஆலை நிறுவப்பட்டது; இப்போது காடுகளில் கிடைக்கும் மூங்கில்கூடப் போதுமானதாக இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில், தஞ்சையில் ஓர் ஆலையை ஏற்படுத்துவது என்பது இயலாத காரியம்."

வேலையிழந்தோருக்கு மாற்று வேலை

சென்னை, மார்ச் 27—

"தமிழக அரசின் ஆட்குறைப்புச் சிக்கன நடவடிக்கையின் காரணமாக மதுரை மாவட்டத்தில் மட்டும் 71 பேர் வேலையிழந்திருக்கின்றனர்; நிரந்தரமாக வேலையில் இருந்தவர்கள் நீக்கப்பட்டால் அவர்களுக்கு மாற்று வேலை தரப்பட்டிருக்கிறது; தற்காலிகமாக வேலையிலிருந்தோர் மட்டுமே வேலையை இழந்திருக்கின்றனர்"

என்று, முதலமைச்சர் அண்ணு அவர்கள் சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினுர்.

விருது அளிப்பு விழா

தமிழக அரசின் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கான விருது அளிப்பு விழவும — அரசினர் தேர்வு ஆணையாளர் அலுவலகப் புதுக் [illegible] திறப்பு விழாவும் 2[illegible] மாலை 5 மணிக்கு [illegible] இயக்குநர் அலுவல[illegible] பெறும்; தமிழக [illegible]ல்சிங் அவர்கள் [illegible] ஆசிரியர்களுக்கு [illegible]ருவார்; முத[illegible] அவர்கள் [illegible] திறந்துவைப் [illegible]ச்சர் திரு. இரா. [illegible]ர்கள் பாராட்

நடக்க இருப்பவை

29--3--68

சென்னை 95-வது வட்டம்

கலைஞர் கருணுநிதி மன்றச் சார்பில்; மாலை 7-மணிக்கு தியாகராயநகர் பஸ் நிலையம் அருகில்; தலைவர்: சி. தியாகராசன்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., க. அறிவழகன் எம்.எல்.சி., புலவர் அறிவுடைநம்பி, ஏ. ஜி. பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ., அலங்காரம் எம்.எல்.ஏ., முசிறி புத்தன், வை. பாலசுந்தரம், அ. லோகநாதன், மற்றும் பலர்.

திட்டக்குடி

எஸ். எஸ். ஆர். மன்றத் திறப்பு விழா; மாலை 4-மணிக்கு மெயின்ரோடில்; தலைவர்: இரா. கோவிந்தன்; திறப்பாளர்: ச. இராமலிங்கம்; கொடியேற்றுபவர்: எம். செல்வராசு; எஸ். எஸ். ஆர். படத்திறப்பாளர்: வை. பி. பழனியாண்டி; பேசுவோர்: புலவர் ம. பொன்னம்பலம், டாக்டர் து. கலியமூர்த்தி, மற்றும் பலர்.

31--3--68

குற்றம்பொருத்தானிருப்பு

தி. மு. க. உழவர் முன்னேற்ற மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு இராசேந்திரன் திடலில்; தலைவர்: ஆர். செல்லப்பா; பேசுவோர்: எஸ். கஸ்தூரி பி.எஸ்சி., அ. இராசகோபால், அ. அம்பலவாணன், பொ. கணபதி, கோ. செல்வராசு, கே. வி. இராமன், இ. வெள்ளத்துரை, கே. கே. சித்திரவேலு, வ. தருமதாசன். (இரவு 8-மணிக்கு டேப்-இராமச்சந்திரன்—சாந்தா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்).

வீரசோழன்

நகர தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர்: கு. கந்தசாமி; வரவேற்பு: ஏ. ஓ. எஸ். இபுராகிம்; பேசுவோர்: அமைச்சர் சாதிக் பாட்சா, இர. சின்னச்சாமி பி.எஸ்சி., சுந்தரராசன், இரா. கிருட்டினன், ந. பி. மணி, வி. எம். ஏ. கமால் முகமது.

கரைக்கால்

மஜீது மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு காஜியார் வீதியில்; தலைவர்: எம். ஏ. எம். ரசீது; பேசுவோர்: மு. இயலரசன், எஸ். கணேசன் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் எஸ். இராமசாமி, பொன். இராமசாமி, ப. அ. கரீம், ஏ. எம். எஸ். ஜப்பார் பி.ஏ., எம். எம். அலி, கே. ஏ. எம். இபுராகிம்.

பெங்களூர்

19-வது வட்ட சின்னசாமி நினைவு மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு கெம்பாபுர அக்ராவரம் (பின்னி மில் அருகில்); தலைவர்: தி. திராவிடமணி; பேசுவோர்: சி. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., வே. இளஞ்சேரன், மு. அதியமான், சிவசங்கர்.

சிவகாசி

சவுந்தரபாண்டியனுர் நினைவு மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு மணிக்கட்டி ஊரணித் திடலில்; தலைவர்: ச். செல்வராசன்; பேசுவோர்: ம. ஜேம்ஸ்'டிரோஸ், ஜே. சாமுவேல், மற்றும் பலர்.

புதுக்கோட்டை

20-வது வட்ட எம்.ஜி.ஆர். மன்றத் துவக்க விழா; மாலை 6 மணிக்கு சாந்தனுதபுரம் பெரியார் சதுக்கத்தில்; தலைவர்: அ. மாணிக்கம் எம்.சி.; திறப்பாளர்: அ. தியாகராசன்; எம்.ஜி.ஆர். படத் திறப்பு: பெ. வாசு எம்.சி.; பேசுவோர்: நன்னிலம் அ. நடராசன், எம். எஸ். அப்துல் மஜீத், எஸ். ரெங்கசாமி எம்.சி, க. சிங்கமுத்து, பா. செழியன், மற்றும்

மேலவை பட்டதாரிகள் தொகுதித் தேர்தல்

கோவை மாவட்ட தோழர்கட்கு:

8—4—68 அன்று நடைபெறவிருக்கும் தமிழகச் சட்டமன்ற மேலவைக்கான பட்டதாரிகள் தொகுதித் தேர்தலில் கழகத் தோழர்கள் ஆற்றவேண்டிய கடமையை வலியுறுத்தி, கோவை மாவட்ட தி. மு. க. செயலாளர் உடுமலை ப. நாராயணன் எம்.பி. அறிவிப்பதாவது:—

"பட்டதாரிகள் தொகுதித் தேர்தலில் முதன்முறையாகத் தி. மு. கழகம், தோழர் செ. அரங்கநாயகம் எம்.ஏ பி.டி., பி எல். அவர்களை நிறுத்தியிருக்கிறது.

"நான்கு மாவட்டங்கள் அடங்கியது இத்தொகுதி; நாட்களோ மிகக் குறைவு; கழக நிர்வாகிகள், மற்றுமுள்ள செயல்வீரர்கள் தோழமைக் கட்சி நண்பர்கள் ஆகியோர், வேட்பாளரின் வருகையை எதிர்பாராது, '13, கோபாலபுரம், கோவை' என்ற முகவரியிலுள்ள தேர்தல் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பணிபுரிய வேண்டுகிறேன்.

"வாக்காளரைச் சந்தித்தல்—ஆதரவைத் திரட்டுதல்—நண்பர்கள், உறவினருக்குக் கடிதம் எழுதுதல் போன்ற கா[illegible]யங்களில் ஈடுபட வேண்[illegible]கிறேன்.

"தேர்தல் நாளன்று சுறுசுறு[illegible]பாக இருந்து நமது வேட்ப[illegible]ளர் மகத்தான வெற்[illegible] பெறப் பாடுபட வேண்[illegible]கிறேன்."

புதுவை வட்[illegible] தி.மு.க. தோழர்கட்[illegible]

"31-3-68 காலை 9-30 மண[illegible] புதுவை வட்ட தி. மு. க. உ[illegible]பினர்கள், கிளைக்கழகச் செ[illegible]ளர்கள்—பிரதிநிதிகள், சார்பு[illegible]றச் செயலாளர்கள்—பிரதிநிதி[illegible] கூட்டம்; 232, பாரதி வீதி ([illegible] வெளி) கழகப் பணிமனை அருக[illegible] தி. மு. கழக அமைப்புச் [illegible]லாளர் திரு. என். வி. நடரா[illegible] முன்னிலையில்—எம். ஏ. சண்மு[illegible] தலைமையில் நடைபெறும்; [illegible] போது, பல பிரச்சினைகள் [illegible]வுக்கு எடுத்துக்கொள்ளப்படு[illegible] அனைவரும் தவருது கலந்[illegible] கொள்ளுமாறு கேட்டுக்கொ[illegible]கிறேன்" என்று வட்ட தி. மு. க[illegible] செயலாளர் எம் ஏ. சண்முகம் அறிவிக்கிருர்.

குழுக் கூட்டம்

"சிவகாசி நகர தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம்; 31—[illegible]—68 காலை 9-மணியளவில் மகாலிங்கம் திரைப்பட அரங்கில்—அவைத் தலைவர் தோழர் ச. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும்; பல பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்" என்று செயலாளர் ஏ. துரைக்கண்ணன் அறிவிக்கிருர்.

கலை நிகழ்ச்சி

குடந்தை கே. கே. என். படிப்பகச் சார்பில் 31—3—68 மாலை 6-மணிக்கு கீழகடலங்குடித் தெருவில், ஆர். பக்கிரிசாமி தலைமையில் மணி—சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

கண்ணம்மா தங்கராசு கலைநிகழ்ச்சிகள்

மார்ச் 30: பாம்பனூர்; 31: புதுக்கோட்டை; ஏப்ரல் 1: மதுரை; 4: ஆசாரிப்பட்டி; 7: இராசபாளையம்; 9: சேங்கனூர்; 10: மேலச்சின்னனம்பட்டி; 12: சென்னை; 14: ஏலப்பாரை.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிஞர் அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.